# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 84 of 2017

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

Name : திரு. சரவணன்

Age : 35

Father's/Husband's Name : அம்மாசை

Village : தொங்குட்டிப்பாளையம்

Taluk : திருப்பூர் தெற்கு

Occupation : டெய்லர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February 2021

முதல் விசாரணை: நாள்.10.02.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு டெய்லர் வேலை செய்து வருகிறேன். கடந்த 01.02.2017 அன்று நான் என் வீட்டிலிருந்து அவினாசிபாளையம் சென்று கொண்டிருந்தேன். அப்போது காலை 7-7.30 மணி இருக்கும். அவினாசிபாளையம் பெட்ரோல் பங்க் அருகில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது காலை 5-5.30 மணிக்கு நடந்த ஒரு விபத்து சம்பந்தமாக சம்பவ இடத்தில் போலீசார் கூட்டமாக இருந்தார்கள். நான் சென்று பார்த்தேன். அங்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்துகொண்டிருந்தார்கள். என்னிடம் அதில் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும், தங்கவேலுவும் சாட்சிகளாக கையொப்பம் செய்து கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2.,

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு கு.வி.

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து நடந்த இடத்தில் விபத்தினை ஏற்படுத்திய கார் மற்றும் லாரி ரோட்டின் கிழபுறமாக நின்றுக்கொண்டிருந்தது. சம்பவ இடத்தில் சுமார் 20 பேருக்கு மேல் கூட்டமாக இருந்தார்கள். என்னுடன் கையொப்பம் செய்தவர் என்னுடைய உறவினரா என்றால் உறவினர் இல்லை, ஒரே ஊரைச்சேர்ந்தவர். நான் கையொப்பம் செய்த பார்வை மகசரை யார் தயார் செய்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் தயார் செய்தார். எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரே கையொப்பம்தான் செய்தேன். என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரிக்கவில்லை, சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நான் படித்து பார்த்தேன். அதில் விபத்து எவ்வாறு நடந்தது என்று எழுதப்பட்டிருந்தது. போலீசார் மாதிரி வரை படம் தயார் செய்யும்போது விபத்திற்குள்ளான கார் மற்றும் லாரி ரோட்டிற்கு கிழபுறம் இருந்தது. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதை மாற்றி போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்